முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1525

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**02.12.2023**, சனிக்கிழமை

1. அவதார ஞானியே அரங்கா
அறம்காத்து வருகின்ற தேசிகா
புவனத்தை ஞான உலகமாக்கி
புண்ணியவான்களை பெருக்கி உலகமெல்லாம்
2. உலகமெல்லாம் ஞான ஆட்சி நிகழ
உயர்வான மாற்றம் தரவந்த ஞானியே
ஞானியே ஆறுமுக அரங்கனே
ஞாலமதில் உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
3. கனிவுடனே ஞான அறிவுரை ஆசி
கண்டுரைப்பேன் சோபகிருது தேள் திங்கள் தன்னில்
(சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 16 ம் நாள், 02.12.2023, சனிக்கிழமை)
தன்னிலே அரங்கனே கலியின் சிறந்த ஞானி
தவசி அரங்கன் உன் தர்மமே கலியினில் சிறந்த தர்மம்
4. தர்ம வழிகளை உலகோர் பின்பற்றி
தவராஜனே என நம்பி முழுமைபட
அகத்தியர் சன்மார்க்க சங்க நெறிமுறையை
அகத்துள் வைத்து அனைவரும் அபயமென ஏற்றுவர
5. வருகின்ற மக்கள் அனைவருக்கும்
வையகத்தில் வாழும் காலமே
ஆறுமுகன் என் ஆசியும் காட்சியும்
பெருமைபட உரித்தாகி இனிதே
6. பேருலகில் இனி பிறவாத
பேற்றுக்கு வழி பிறக்கும்
வகைபட அரங்கனை நம்பி விட்டால்
வையகத்தில் வடிவேலன் என் காட்சி உறுதி உறுதி

7. தர்மத்தில் அரங்கனோடு கலந்துவிட்டால்
தானவர்கட்கு என் பாதுகாப்பு உறுதிஉறுதி
உறுதி தந்து அரங்கனோடு யான்
உயர்வாக மகா சக்தியாக கலந்துநிற்க
8. கருதி அரங்கனோடு இணைந்தால்
கலியுத்தில் யாவர்க்கும் இனி பிறவாத பெரும்பேறு உறுதிஉறுதி
உறுதி தந்தேன் அழியாமை எனும் சக்தி
உயர் ஞானி அரங்கனை கொண்டுதான்
9. பேருலகமெங்கும் யான் நிரப்ப இருக்க
பிரபஞ்சத்தில் உலகோர் அரங்கனை
நம்பி வந்தால் போதும்
அற்புதம் சடுதி கலியினில் நடக்கும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–